REGD. NO. M.:6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 17உ வியாழன் (30—5—57) ★ ★ வெளியூர்: வைகாசி 18உ வெள்ளி (31—5—57) [இதழ் 301

சென்னை நகருக்கு 'அந்தஸ்து' உயர்வு கிடையாதாம்!

புதுடில்லி, மே 29—

சென்னை, கான்பூர், டில்லி ஆகிய நகரங்கள் தற்போது 'பி' வகுப்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளன.

'மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்படும் வீட்டு வாடகை, ஈடு தொகை முதலியவற்றை உயர்த்தி, சென்னை, கான்பூர், டில்லி ஆகிய நகரங்களின் அந்தஸ்தை 'ஏ' பிரிவுக்கு உயர்த்தப்படுமா?' என்று மக்கள்சபையில் பானர்ஜி என்ற உறுப்பினர் கேட்டதற்கு, மத்திய உதவி நிதிஅமைச்சர் பகத், 'இல்லை' என்று திட்டவட்டமாகப் பதிலளித்துள்ளார்.

'இராணுவச் செலவைக் குறைக்க வேண்டும்'

காந்தியாரைப்பின்பற்றுகிறவர் இப்படி நடக்கலாமா?

உலக அமைதியை உடன்பாடாகக் கொண்டிருப்பவர் மேற்கொள்ளும் செயலா?

'காங்கிரசார் நடத்தை வெறும் பாசாங்கேயாகும்'

மக்கள் சபையில் கிருபளானி சாடுகிறார்

புதுடில்லி, மே 29—

"பெருகும் இராணுவச் செலவைக் குறைக்கவேண்டும். மகாத்மா காந்தியைப் பின்பற்றுகின்றவர்களும், உலக அமைதியை உடன்பாடாகக் கொண்டிருக்கின்றவர்களும் படைச் செலவைப் பெருக்கக் கூடாது. அவ்வாறு இல்லையானால் அவர்களுடைய நடத்தை வெறும் பாசாங்கே ஆகும்."

இவ்வாறு, வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது பி. சோ. கட்சித் தலைவர் கிருபளானி அவர்கள், மக்கள் சபையில் இடித்துக் கூறியுள்ளார்.

பிலாய் தொழிற்சாலைக்கு இரயில் பாதை!

புதுடில்லி, மே 29—

ரூ. 70 இலட்சம் செலவில் 12 மைல் தூரத்திற்கு, பிலாயிலிருந்து தியோர்ஜால் வரை இரயில் பாதை அமைக்க இரயில்வே நிறுவனம் அனுமதியளித்துள்ளதாம்.

தாளமுத்து கொலை எதிரொலி

கம்யூனிஸ்டு சேவியரும், கம்யூனிஸ்டு அனுதாபி எஸ். நடராசனும் கைது

தூத்துக்குடி, மே 27—

பிரபல கம்யூனிஸ்டு அனுதாபியும், தூத்துக்குடி சங்கு குளிப்போர் சங்கத்தின் தலைவரும், சமீபத்தில் தி. மு. கழகத்திலிருந்து விலக்கப்பட்டவருமான தூத்துக்குடி எஸ். நடராசனை மணியாச்சி இரயில் நிலையத்தில் இரயில் மாறி ஏறிக்கொண்டிருக்கையில் போலீசார் கைது செய்துள்ளனர்.

தூத்துக்குடி தி. மு. கழக முன்னணி வீரர் தாளமுத்து கொலையுண்டது சம்பந்தமாகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் அவர் தூத்துக்குடிக்கு அழைத்து செல்லப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

குறிப்பு:-இவர் நேற்று கைது செய்யப்பட்ட பிரபல கம்யூனிஸ்டு சுடலைமுத்துவின் நெருங்கிய நண்பராவார்; சில தொழிற்சங்கங்களின் நிர்வாகத்தை இருவரும் கூட்டாக நடத்தி வருபவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கம்யூனிஸ்டு சேவியர் சரணடைந்தார்

தோழர் தாளமுத்து கொலை சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த சேவியர் என்ற கம்யூனிஸ்டு, சப்-மாஜிஸ்திரேட் முன்னிலையில் நேற்று சரணடைந்துள்ளார்; அவர், 'ரிமாண்டில்' வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இக்கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்டுகளான ஜி. சுடலைமுத்து, ஐசக் என்ற இருவரும் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் போலீஸ் நிலயத்தில் அவர்கள் ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனையின் மீது இன்று ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மதுரையில் மேலும் ஒருவர் கைது

கழகத் தோழர்கள் தாக்குண்ட சம்பவத்தின் எதிரொலி

மதுரை, மே 30—

மதுரை—செல்லூரில் கழகத் தோழர்கள் நடத்தும் 'பகுத்தறிவுப் பாசறை படிப்பக'த்தில் படித்துக்கொண்டிருந்த தோழர்களை அரிவாளால் தாக்கி வெட்டியது சம்பந்தமாகப் போலீசாரால் தேடப்பட்டுவந்த நல்லபெருமாள் என்பவரை மதுரை ஆலைப்பாளையம் அருகில் தோப்பு ஒன்றில் கைது செய்ததாகத் தெரிய வருகிறது.

அவர் தந்த தகவலின்மீது வைகை ஆற்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 'பிச்சுவா' ஒன்றைப் போலீசார் கைப்பற்றி மேலும் புலன் விசாரணை நடத்தி வருவதாக செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.

மத்திய ஆட்சிக்கு நஷ்டம் ஏற்படுகிறதாம்

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, மே 28—

தசாம்ச நாணய முறை அமுல் செய்யப்பட்டதும் 0—0—3 வின் மதிப்பு 1·5625 புதிய காசாக கணக்கிடப்பட்டிருந்தும் கூட அஞ்சல்மூலம் பத்திரிகைகளை அனுப்புவதற்கு 2 புதிய காசுகள் மதிப்புள்ள தபால் தலைகள் ஒட்ட வேண்டியுள்ளதை மக்கள் சபையில் சுட்டிக் காட்டியபோது, மத்திய போக்குவரத்து அமைச்சர் இராஜ்பகதூர், எற்கனவே பத்திரிக்கைகளை எடுத்துச் செல்வது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் ஆண்டுதோறும் ரூ. 1,15,00,000 நஷ்டமடைந்து வருகிறது என்று குறிப்பிட்டு, இத்துறையில்மேலும் அரசாங்கம் நஷ்டமடைய முடியாது என்று தெரிவித்துள்ளார்.

'அமைச்சர்-அதிகாரிகள்சம்பளத்தைக் குறைக்க வேண்டும்'

'மந்திரிகள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்'

'கவர்னர் அமைப்பு அவசியமற்றது'

'கவர்னர் மாளிகைகளை மருத்துவ மனைகளாக்க வேண்டும்'

ஆச்சாரிய கிருபளானியின் அரியயோசனை

புதுடில்லி, மே 29—

"கவர்னர் அமைப்பு நீக்கப்படவேண்டும். மாநிலங்கள் சிலவற்றில் இருந்துவரும் மேல் சபை அமைப்பும் விலக்கப்படவேண்டும்.

"ஆங்கில ஆட்சியின்பொழுது கவர்னர்களுக்கு இருந்த பொறுப்பும் பணியும் வேறு; அத்தகு பொறுப்பும் பணியும் இப்பொழுதுள்ள கவர்னர்களுக்குக் கிடையாது. எனவே, மெய்க்காப்பாளர்களும், இராணுவப் பாதுகாப்பும் இப்பொழுதுள்ள கவர்னர்களுக்குத் தேவையே இல்லை.

பெரும் நகரங்களில் ஒரு சதுர மைல் நிலப்பரப்பில் கவர்னர்களுக்கென மாளிகைகள் இருப்பது நியாயமாகுமா? 'சுதந்திர இந்தியாவில் அவைகளை எல்லாம் மருத்துவ விடுதிகளாக மாற்றவேண்டும்,' என அப்பொழுது காந்தியார் கூறினார். ஆனால், தேர்தலில் தோற்றுப் போன—களைத்தும் சளைத்தும் போயிருக்கின்ற அரசியல்வாதிகளுக்குரிய ஓய்வு மடமாக அவைகள் இன்று ஆக்கப்பட்டுள்ளன."

—மேற்கண்டவாறு, பி. சோ. கட்சித் தலைவரான ஆச்சாரியா கிருபளானி மக்கள் சபையில் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியிருப்பதாவது :—

"வரி செலுத்தாமல் தப்பித்துக் கொள்வது தடுக்கப்படுமானால், புது வரிகளைப் போடுவதற்கான தேவை குறைந்திருக்கும்.

"தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்திலும், பக்ரா நங்கல் திட்டத்திலும் உயர்தர அதிகாரிகளிடை இலஞ்சம் தாண்டவமாடுவதாகக் குறிப்பிட்டுள்ள ஆய்வுக் குழுவின் அறிக்கை மக்கள் சபை உறுப்பினர்களுக்குத் தரப்பட வேண்டும்."

தாம் பெறும் ஊதியத்தில் மாதம் ஆயிரம் ரூபாயைக் குறைத்துக்கொள்ள குடியரசுத் தலைவர் தாமாக முன்வந்துள்ளதைப் பாராட்டிவிட்டு, இந்தியா போன்ற நாட்டில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டாயிரத்துக்குமேல் ஊதியம் வாங்கும் அமைச்சர்களோ அரசாங்க அதிகாரியோ எவரும் இருக்கக் கூடாது என்று கிருபளானி எடுத்துரைத்தார்.

"அத்தொகை, ஒரு அமைச்சருக்குப் போதுமானதாக இருக்க முடியுமா என எவராவது கேட்க முன்வருவார்களானால், கிராமத்தில் வேலைசெய்துவரும் தொழில் பயிற்சி பெறாத ஒரு தொழிலாளிக்குக் கிடைக்கும் வருமானத்தை விட நூறு மடங்கு இது கூடுதலானதாகும்" என்றும் அவர் விளக்கிக் கூறினார்.

"மக்கள் சபை உறுப்பினர்கள் வாங்கிவரும் படியிலும் தம்மிச்சையாகக் கொஞ்சம் குறைத்துக் கொள்ள உறுப்பினர்கள் முன்வர வேண்டும்" என்றும் கிருபளானி கோரினார்.

மக்கள் சபை உறுப்பினர் ஒருவர் மாதச் சம்பளமாக ரூ. 400-ம் மக்கள் சபை கூடும் காலத்தில் தினம் ஒன்றுக்கு ரூ. 21 'படி'யாகவும் இப்பொழுது பெற்று வருகின்றனர்.

"மிச்சம் பிடிக்கக்கூடிய செலவினங்கள் பல உள்ளன. அரசாங்க அலுவல்களுக்காக உபயோகப் படுத்துவது நீங்கலாக சொந்த காரியங்களுக்கு அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்தி வருவதை அரசாங்க அதிகாரிகள் தவிர்க்க வேண்டும்.

"மலை நகரங்களில் அதிகாரிகள் கூட்டம் கூடுவதற்கு நியாயமே கிடையாது. அது கைவிடப் பட வேண்டும்.

"அமைச்சர்கள் எண்ணிக்கைக் கட்டப்படுவதற்கும், அவர்கள் சார்பாக 'வால்'போல் உள்ள அதிகாரிகள் அணிவகுக்கப் படுவதற்கும் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்" என்றும் கிருபளானி குறிப்பிட்டார்.

ஆட்சியின் அவலட்சணம்

தொலைபேசி கம்பிகள் திருட்டு அதிகமாகி வருகிறதாம்

புதுடில்லி, மே 29—

கல்கத்தாவுக்கும் - டில்லிக்கும் இடையே உள்ள தொலைவழி, தொலை பேசி கம்பிகள் ஆண்டு தோறும் அதிகமாகக் களவாடப் படுகிறதாம்.

1955—56-ல் ரூ. 5,21,159 - மதிப்புள்ள கம்பிகள் திருட்டுப் போய்விட்டதாம்!

1956—57ல் ரூ. 7,37,405 மதிப்புள்ள கம்பிகள் திருட்டுப் போயிருக்கிறதாம்.

நிதி மந்திரிக்கு அதிகாரம் உண்டா?

புதுடில்லி, மே 28—

'இரயில்வே பிரயாணக் கட்டணத்திற்கு வரி விதிப்பதற்கு நிதி மந்திரிக்கு உரிமை உண்டா?' என்ற பிரச்சினையை மேற்கு வங்கத்திலிருந்து வந்துள்ள காங்கிரஸ் உறுப்பினர் சதீஷ் சந்திர சமந்தா என்பவர் இன்று மக்கள் சபையில் கேள்வி எழுப்பினர்.

'இரயில்வேவருமானம், பொது வருவாய்க்கும் - இரயில்வே நிர்வாகத்திற்கு மிடையே எப்படி பங்கிடப்பட வேண்டும் என்ற சம்பிரதாயம் இந்தச் சபையால் மாற்றப் படாதிருக்கும்போது, நிதி மந்திரிக்கு அவ்வாறு வரி விதிக்க உரிமை கிடையாது' என்று அவர் வாதாடினர்.

நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 'இந்தக் கேள்வியை எழுப்ப நேரம் இதுவல்ல' என்றும், 'நிதி மசோதா வரும்போது எழுப்பலாம்' என்றும் கூறினர்.

சபைத் தலைவரும், நிதி மசோதா விவாதத்தின்போது இதனை விவாதிக்க அனுமதிப்பதாகக் கூறியிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.கழக தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 30—5—57 வியாழன்

மாக்னசைட் சோகக் கதை!

சேலம் பகுதியில் இரும்புக் கனிப் பொருள் இருந்து வருவது போன்றே, அலுமினிய உற்பத்திக்கான பாக்சைட் தாதுப் பொருளும் ஏராளமாக இருந்து வருகிறது. இத்தனை ஆண்டுக்காலமாக அந்த இரும்புக் கனிப்பொருளை தமிழக மக்கள் பயன்படுத்திக் கொள்ள முன் வாராதது போன்றே, அங்கு கிடைக்கப்பெறும் பாக்சைட்டையும் தமிழ் மக்கள் பயன் படுத்திக்கொள்ள முந்தவில்லை.

இரும்பும், பாக்சைடும் இருப்பது போலவே, சேலத்து மண்ணுக்கடியில் மாக்னசைட் என்ற மற்றொரு தாதுப் பொருளும் மறைந்து கிடக்கிறது.

உருக்கு—இரும்பு உலையும், பாய்லர்களுக்கான உட்புறக் கவசமும், பெருந்தீயிக்கும் உருகாத் தன்மைகொண்டிருக்கும் மாக்னசைட் தாதுப் பொருளைக்கொண்டுதான் செய்ய முடியுமாம்.

உருக்கு-இரும்புத் தொழிலின் ஆக்கம், இந்த மாக்னசைட் தாதுப் பொருளைப் பற்றி இருப்பதாகும். நீராவி இயந்திரங்களின் பாய்லருக்கும் இந்த மாக்னசைட் தாதுப் பொருள் இன்றியமையாத் தேவையாகும்.

ஏற்கனவே இங்கிருந்த ஆங்கில ஆட்சி, மேற்படி மாக்னசைட்டை வெட்டியெடுக்கும் உரிமையை ஒரு பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு வழங்கி இருந்தது. அதன்படி, சென்ற அறுபது ஆண்டுக்காலமாக, சேலத்தில் 4,500 ஏக்கர் நிலப்பரப்பில் படிந்திருக்கும் மாக்னசைட் தாதுப் பொருளை, மேற்படி பிரிட்டிஷ் நிறுவனம் வெட்டி எடுத்துப் பயன்படுத்தி பணம் திரட்டிவந்தது. அவ்வுடன்படிக்கை 1959-ம் ஆண்டுடன் முற்றுப் பெறுகிறது.

வேறு மூன்று இந்திய சுரங்க நிறுவனமும், சேலம் மாவட்டத்தில் மாக்னசைட்டைத் தோண்டி எடுத்து பெரும் இலாபம் சம்பாதித்து வருகின்றன. அம்மூன்று நிறுவனங்களில் சேத் தால்மியா நிறுவனமும் ஒன்று என நம்பப்படுகிறது.

மாக்னசைட்டை வெட்டி எடுப்பதற்காகப் பிரிட்டிஷ் நிறுவனம் பெற்றிருந்த உரிமை 1959-ல் முடிவு பெறுவது போன்றே, அதே காலத்தில் மற்ற மூன்று நிறுவனங்களின் உரிமையும் முற்றுப் பெற்று விடுகின்றதா என்பது தெரியவில்லை. அவைகளின் உரிமை முற்றுப்பெற்ருலும் பெருமல் போனாலும், பிரிட்டிஷ் நிறுவனத்தின் உரிமை மட்டுமாவது முற்றுப் பெறுவது மகிழ்ச்சிக்குரியதேயாகும்.

4,500 ஏக்கர் நிலப்பரப்பில் படிந்திருக்கும் உயர்ந்த மாக்னசைட் தாதுப் பொருளை வெட்டி யெடுத்துப் பயன்படுத்தும் உரிமையைக் கடந்த அறுபது ஆண்டுக் காலமாகப் பெற்றிருந்த பிரிட்டிஷ் நிறுவனத்தின் குத்தகை, இறுதிக் காலத்தை நெருங்குவதைக் கண்டதும், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் கையொப்பமிட்டு, விண்ணப்பம் ஒன்றை சென்னை ஆட்சியினருக்குஅளித்தனராம். அவ்விண்ணப்பத்தில், மேற்படி குத்தகை காலத்தை அதே பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு மேலும் நீடிக்கக் கூடாது என்றும், மாக்னசைட்டை வெட்டி எடுத்துப் பயன்படுத்தும் பணியினை சென்னை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டு இருந்ததாம்.

மாக்னசைட்டை வெட்டி எடுத்துப் பயன்படுத்துவதின் மூலம் சென்னை அரசாங்கத்திற்குப் பெரும் வருவாய் கிடைக்கும் என்றும் அவ்விண்ணப்பத்தில் விளக்கப்பட்டிருந்ததாம்.

நீராவி இயந்திரங்களுக்கான பாய்லர்களின் உட்புற குழலை உற்பத்திச் செய்ய, தொழிற்சாலை ஒன்றையும் நிறுவும்படி, மேற்படி விண்ணப்பத்தில் கோரப்பட்டிருந்ததாம். மூன்று உருக்குத் தொழிற்சாலைகளும், புகைவண்டி இயந்திரத்திற்கான பாய்லர்களின் உற்பத்திக்கும் இரண்டாவதுத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதால், மேற்படி தொழிற்சாலைக்கான முக்கியத்துவமும் பெருகக்கூடும் என்பது சொல்லாமலே விளங்கும்.

விளக்கமான விண்ணப்பத்தைப் பெற்றுள்ள சென்னை அரசாங்கம், மாக்னசைட்டை வெட்டியெடுப்பதற்கு மீண்டும் பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு உரிமை வழங்கக்கூடாது என முடிவுகட்டி இருப்பதாகத் தெரியவருகிறது. அந்த முடிவைப் பொறுத்தவரையில் சென்னை அரசாங்கம், தமிழ் மக்களின் பாராட்டுதலுக்கு உரியதேயாகும்.

ஆனால், மாக்னசைட்டை பயன் படுத்தத் தொழிற்சாலை ஒன்றை, சேலம் மாவட்டத்திலேயே தனது சொந்தப் பொறுப்பில் துவங்குவது குறித்து இன்னும் சென்னை அரசாங்கம் இறுதியான முடிவிற்கு வரவில்லை என நம்பப்படுகிறது. அவ்வாறு முடிவு கட்ட முடியாமைக்கும் டில்லி ஆதிக்கத்தின் குறுக்கீடே பெரிதும் காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

சென்னையின் நலத்திற்கும், டில்லியின் நலத்திற்கும் எதிலும் இருந்துவருவதேபோல், இத்துறையிலும் மோதுதல் கிளம்பியிருக்கின்றது. இம் மோதுதல் என்றும் எதிர்பார்க்கக்கூடியதேயாகும்.

இத்தகு மோதுதல்களுக்கு இடமளிக்கும் வகையில்தான் இந்திய அரசியல் சட்டம் ஆக்கப்பட்டு இருக்கின்றது. மாக்னசைட்டை அடிப்படையாகக் கொண்டு சென்னைக்கும் டில்லிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதுதலில், டில்லிக்குச் சென்னை குனிந்து கொடுக்க முன்வருமானல் அது வியப்புக்குரியதன்று. அத்தகைய சோக முடிவை உருவாக்கக்கூடிய வகையில்தானே இந்திய அரசியல் சட்டம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

பக்கிங்காம் கால்வாய்த் திட்டம்

இனி துரிதப்படுத்தப்படுமாம்

புதுடில்லி, மே 28—

பக்கிங்காம் கால்வாயை விரிவு படுத்துவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது தெரிந்த ஒன்ருகும். இந்தக் கால்வாய், ஆந்திர மாநிலத்திலும், சென்னை மாநிலத்திலும் ஓடுகிறது.

ஆந்திர அரசாங்கம் தன் பகுதியில் ஓடும் கால்வாய்ப் பகுதி பற்றி பரிசிலனை செய்து, அது பற்றிய முடிவுகளை இந்தியப் போரசுக்குத் தெரிவித்து விட்டதாம்.

சென்னை அரசாங்கம், இந்தக் கால்வாய்த் திட்டத்தில் கூட அதிக அக்கறை காண்பிக்கவில்லை போல் தெரிகிறது.

இத்திட்டம் பற்றி பரிசிலனை செய்து தன் முடிவுகளை தெரிவிக்கவில்லை என்று தெரியவருகிறது.

சென்னை ஆட்சியாளரின் இந்த அலட்சியப் போக்கு, மக்கள் சபையில் போக்குவரத்து உதவி அமைச்சர் தந்துள்ள பதிலில் காணப்படுகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தக் கால்வாய் மூலம் மோட்டார் படகுகள் போக்குவரத்திற்கு வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், மத்திய அரசாங்கம் இதில் தலையிட்டு ஒன்றும் செய்வதற்கில்லை என்றும், இருந்தபோதிலும் சென்னை முதலமைச்சருடன் ஆலோசனை செய்து இனி பக்கிங்காம் கால்வாய்த் திட்டத்தைத் துரிதப்படுத்த ஆவன செய்யப்படும் என்றும் மக்கள் சபையில் மத்திய அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

இந்தியாவில் கனிப் பொருள் உற்பத்தி

ஒரு புள்ளி விவரம்

புதுடில்லி, மே 29—

1956-ம் ஆண்டில் இந்தியாவில் ரூ. 116,40,00,000 மதிப்புள்ள கனிப் பொருள் உற்பத்தியாகியுள்ளதாம். இது சென்ற ஆண்டைவிட ரூ. 10,80,00,000 அதிகமாம்.

ரூ. 57,60,00,000 மதிப்புள்ள 3,94,00,000 டன் நிலக்கரி உற்பத்தியாகியுள்ளதாம்.

மற்றும், மாங்கனீஸ் தாது ரூ. 24,70,00,000; மைகா ரூ. 7,70,00,000; இரும்பு ரூ. 3,90,00,000; தங்கம் ரூ. 5,80,00,000; உப்பு ரூ. 5½ கோடி; சுண்ணும்புக்கல் ரூ. 3,30,00,000; செம்பு ரூ. 3 கோடி மதிப்புக்கு இந்தியாவில் 1956-ல் கிடைத்துள்ளதாம்.

மைசூர் மாநிலத்தில் 365 ஆரம்பப் பள்ளிகள்

பெங்களூர், மே 28—

புதிய மைசூர் மாநிலத்தில் 1957—1958-ம் ஆண்டில் 365 ஓராசிரியர் ஆரம்பப் பள்ளிகளைத் திறக்க அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம்.

இதனால் அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 2,75,940 ஆரம்பத்திலும் பிறகு ரூ. 4,21,000 அவ்வப்போதும் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தென்னவர் பங்கைத் தட்டிப் பறித்ததேன்?

மாநிலங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏன்?

புதுடில்லி, மே 28—

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் செலவிடப்படும் ரூ. 4800 கோடியில், தென்னுட்டில் உள்ள நான்கு மாநிலங்களுக்கும் டில்லி வஞ்சனை இழைத்துள்ளது என்பதை மக்கள் சபையில் உறுப்பினரொருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"சென்னை, ஆந்திரம், கேரளம் மைசூர் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும் முறைப்படி ரூ. 1,200 கோடி செலவிட திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனல், தற்போது நான்கு மாநிலங்களுக்கும் சேர்ந்து மொத்தம் ரூ. 6000 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

"மாநிலங்களுக்கிடையே இத்தகைய ஏற்றத் தாழ்வு நிலவியிருப்பதைப் பற்றி நிதி அமைச்சரும், திட்டக்குழுவும், மத்திய அரசாங்கமும் ஆராய வேண்டும்" என்று வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது பேசுகையில் ஆர். இராமநாதன் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

★

அபிவிருத்தித் திட்டங்களிலும்

ஓர வஞ்சனையா?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கும்போது தென்னடு புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் தோழர் ஆர். இராமநாதன் சுட்டிக்காட்டினர்.

சென்னை, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய நான்கு மாநிலங்களில் வாழும் மக்கள் தொகையை இந்தியாவின் மக்கள் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, கால் பகுதியாகும் என்று தெரிந்திருந்தும்கூட, தற்போது திட்டத்திற்குச் செலவிடப்படும் மொத்த பணத்தில் 1/8 பகுதியே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நான்கு மாநிலங்களின் மக்கள் தொகையைக் கொண்டு, மொத்தத் திட்டச் செலவில் கால் பங்கு தொகையைப் பெறவேண்டியது. தென் மாநிலங்களின் உரிமையாகும்" என்றும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

அமெரிக்காவின் பிடிவாதப் போக்கு

நெவாடாவில் அணுகுண்டு வெடித்ததாம்

நெவாடா, மே 28—

அகிலமெங்கும் அணு ஆயுத சோதனைகளுக்கு எதிர்ப்பும், கண்டனமும் தெரிவித்திருந்தும், அறிவாளிகள் ஆதாரங்களுடன் வல்லரசுகளுக்கு அதன் விளைவுகளைச் சுட்டிக் காட்டியும் கூட அணு ஆயுத சோதனைகளில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

நெவாடா பாலைவனத்தில் அமெரிக்க அரசாங்கம் இன்று ஒரு பெரிய அணுஆயுத சோதனை நடத்தியதாக செய்தி கிடைத்துள்ளது.

அமெரிக்க கோடை காலத்தில் பல அணு ஆயுத சோதனைகளை நடத்தத் திட்டமிட்டு செயல்படுவதற்குத் துவங்கி விட்டது.

இன்று வெடித்த அணுகுண்டு 10,000 டி. எஸ். டி. வெடி மருந்துக்கு சமானமானதாம்.

500 அடி உயரமான இரும்பு கோபுரத்தில் இந்த 10 கிலோ டன் நிறையுள்ள குண்டு வெடிக்கப்பட்டதாம். அணுகுண்டு வெடித்தது 'எரிமலை' வெடிப்பது போல ஒலி கிளம்பியதாம். 100 கதிரவன்கள் சேர்ந்த ஒளிக்குச் சமமாக வெளிச்சம் காணப்பட்டதாம்.

பெரிய புகை மண்டலம் வானத்தைப் நோக்கி கிளம்பிக் கொண்டே இருந்தாம்.

கதிரியக்க மண்டலத்தின் விமானங்கள் புகை மண்டலத்தை ஊடுருவி பின் தொடர்ந்து சென்றனவாம்.

இந்திய விமானப் போக்குவரத்து

ஒரு புள்ளி விவரம்

புதுடில்லி, மே 28—

"1956-ம் ஆண்டின் முற்பகுதியில் 1,40,00,000 மைல்களும் பிற்பகுதியில் 1,52,00,000 மைல்களும் மொத்தம்விமானப்போக்குவரத்து நடைபெற்றுள்ளது" என்று 'இந்திய ஏர் லைன்ஸ்' அறிக்கை கூறுகிறது.

முற்பகுதியில் 3,34,255 பிரயாணிகளும், பிற்பகுதியில் 3,38,742 பிரயாணிகளும் விமான வசதியைப் பெற்றுள்ளனராம்.

முற்பகுதியில், சாமான்கள் போக்குவரத்து 8,57,00,000 இராத்தலும், பிற்பகுதியில் 10,75,00,000 இராத்தலும் நடைபெற்றுள்ளதாம்.

'ஏர் இந்தியா இண்டர் நேஷனல் சர்வீஸ்; விமானங்கள் 1956 பிற்பகுதியில் மொத்தம் 29,33,400 மைல்கள் பறந்துள்ளனவாம். மொத்தம் 33,974 பிரயாணிகளுக்கு விமான வசதி கிடைத்துள்ளதாம். 15,93,575 இராத்தல் சாமான்கள் ஏற்றிச் செல்லப்பட்டனவாம்.

இதைத் தவிர 6,72,110 இராத்தல் அஞ்சல்களும் சென்றிருக்கின்றனவாம்.

இரவு சர்வீஸ்!

1956-ம் ஆண்டு பிற்பகுதியில் மட்டும் 'இந்தியன் ஏர் லைன்ஸ்' விமானங்கள் 27,886 பிரயாணிகளை ஏற்றிச் சென்றுள்ளது என்றும், மொத்தம் 27,886 பிரயாணிகளையும், 20,98,708 இராத்தல் அஞ்சல்களும் ஏற்றிச் சென்றனவாம்.

விமான நிலையங்கள்!

1956 டிசம்பர் இறுதிவரை விமானப் போக்குவரத்து இலாகா 83 விமான நிலையங்களைக் கொண்டுள்ளதாம்.

விமானிகள் எண்ணிக்கை

1956 ஆண்டு இறுதியில் 'ஏ' லைசென்சு பெற்ற விமானிகள் 538 பேர் 'பி' லைசென்சு பெற்ற விமானிகள் 523 பேர்; பொறி இயல் நிபுணர்கள் 870 பேர் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

விபத்துகள்

1956 பிற்பகுதியில் இந்தியாவில் 14 பிரதான விமான விபத்துக்களும், 3 கிளைடர் விமான விபத்துக்களும் நடைபெற்றனவாம்.

தாழ்த்தப்பட்ட-பின் தள்ளப்பட்ட மக்களுக்குக் கல்விச் சலுகை

மானியத் தொகையை அதிகரிக்கிறது டில்லி!

புதுடில்லி, மே 28—

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்—சாதியினர், மற்றும் பின்தள்ளப்பட்ட வகுப்பினருக்கு 1957—58-ம் ஆண்டில் வழங்க உத்தேசித்திருந்த கல்வி மானியத்தை ரூ. 156 இலட்சத்திலிருந்து ரூ. 200 இலட்சமாக உயர்த்த டில்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறூர்களாம்.

இந்த ஆண்டிற்கு கல்லூரியில் கல்வி பெறும் மேற்சொன்ன வகுப்பு மாணவர்கள் ஜூலை 31-ந் தேதிக்குள் சலுகை கோரி விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுமாம்.

தமிழகமெங்கணும் போர் முழக்கம்

புது வரி விதிப்பிற்கெதிராக தி. மு. கழகத்தின் தலைமையில் கண்டனம்

ஆயிரக்கணக்கான மக்களின் உள்ளக் குமுறல்

தி. மு. கழக தலைமை நிலையத்தின் அறிக்கைக்கிணங்க, தமிழகமெங்கணும், புது வரி விதிப்புக் கண்டன நாள் 26—5—57 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றிருக்கின்றது.

ஆங்காங்கே, ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், கண்டனப் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றுள்ளன.

தி. மு. கழகத்தின் தலைமையில் திரண்டெழுந்து ஆயிரக்கணக்கான மக்கள், தங்களின் உள்ளக்குமுறலைக் கொட்டிக் காட்டி யிருக்கின்றனர்.

அந்த மகத்தான கண்டன நிகழ்ச்சிகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

சென்னை — சேப்பாக்கம் :

26—5—57 காலை 9 மணிக்கு, சென்னை 40-வது வட்டம் எண் 27, லாக் நகர் சாமி படிப்பக பணிமனையில், புது வரிகள் கண்டன நாள் கூட்டம் தோழர் பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சம்புலிங்கம், தானியேல், நீலகண்டன் ஆகியோர் பேசினர்.

சென்னை—பெத்து நாய்க்கன்பேட்டை :

26—5—57 காலை 9 மணிக்கு, 8-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் புதுவரிகள் கண்டன ஊர்வலமொன்று, 'திராவிடன்' அலுவலகத்திலிருந்து புறப்பட்டு வட்டத்தின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றது. பின்னர், தோழர் கே. எஸ். சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற புது வரிகள் கண்டனக் கூட்டத்தில், தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம், நா. க. சாந்தலிங்கம், என். வி. என். சோமு, ம. இராசவேலு, இரா. து. மணி முதலியோர் பேசிய பின், கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இந் நிகழ்ச்சிகளில் பெத்துநாய்க்கன் பேட்டை திருவள்ளுவர் முத்தமிழ் கழகமும் கலந்துகொண்டது.

சன்னநல்லூர் :

26—5—57 மாலை 4 மணிக்கு, புதுவரிகள் கண்டன நாள் சைக்கிள் ஊர்வலம் தோழா வி. சுப்பிரமணியம் தலைமையில், திருப்புகலூரிலிருந்து புறப்பட்டு, மாப்பிளைகுப்பம் வழியாக நன்னிலம் வந்தடைந்தது. ஊர்வலத்தில் நன்னிலம், மாப்பிளைகுப்பம், சன்னநல்லூர், எனங்குடி, திருப்புகலூர் ஆகிய கிளைக் கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

மேலூர் :

26—5—57 மாலை 6 மணிக்கு புது வரிகள் கண்டன நாள் ஊர்வலமொன்று, மந்தை திடலிலிருந்து, தோழர் கே. பி. பாண்டியன் தலைமையில் புறப்பட்டு நகரின் முக்கிய தெருக்கள் வழியாக சென்றது. ஊர்வலத்தில் வரிக் கொடுமைகளை விளக்கும் சொற்றொடர்கள் எழுதிய அட்டைகளை ஏந்திக்கொண்டும், ஒலி முழக்கங்கள் எழுப்பிக்கொண்டும் தோழர்கள் சென்றார்கள். இறுதியில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சோழவந்தான் :

26—5—57 மாலை 5 மணிக்கு வரி எதிர்ப்பு ஊர்வலமொன்று கழகக் கட்டிடத்திலிருந்து தோழர் எஸ். செல்லத்துரை தலைமையில் புறப்பட்டு முக்கியத் தெருக்கள் வழியாக சென்றது. தோழர் குருசாமியால் கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

உதகமண்டலம் :

26—5—57ல், நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் புது வரிகளைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (மழையின் காரணமாகப் பொதுக் கூட்டம் நடத்த இயலவில்லை.)

திண்டுக்கல் :

26—5—57 இரவு 7 மணிக்கு புது வரிகள் கண்டனப் பொதுக் கூட்டம், சோலை ஹால் திடலில் தோழர் கே. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் என். முத்து, க. வேலாயுதனார், ஏ. சுப்பையா முதலியோர் பேசினர். இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அரூர் வட்ட—சுங்கர அள்ளி :

26—5—57 மாலை 5 மணிக்கு புது வரிகள் கண்டன நாள் ஊர்வலமும், பொதுக்கூட்டமும், தோழர் எஸ். வி. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது; பொதுக்கூட்டத்தில் தோழர்கள் முத்துசாமி, இராமச்சந்திரன், எஸ். பி. மல் (ரெட்டி) மற்றும் பலர் பேசினர்.

அம்பாசமுத்திரம் :

26—5—57ல், புதுவரிகள் கண்டன ஊர்வலமொன்று தோழர் இராமையா தலைமையில் நடைபெற்றது; பின்னர் தோழர் பெருமாள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசியபின், இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முக்கூடல் :

26—5—57 மாலை 6 மணிக்கு, புது வரிகள் கண்டன ஊர்வலத்தில், வரிகளை நீக்க வேண்டுமென வற்புறுத்தும் சொற்றொடர்கள் எழுதிய அட்டைகளையும், கழகக் கொடிகளையும் கைகளிலேந்திய வண்ணம் தோழர்கள் ஒலி முழக்கமிட்டுச் சென்றார்கள். இரவு 9 மணிக்கு இவ்வூர் காந்தி திடலில், தோழர் மா. சு. முத்துக்குட்டி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. என். முத்தையா, ஆறுமுகம், அருணு, வழக்கறிஞர் எஸ். இரத்தினவேல் ஆகியோர் புது வரிகளைக் கண்டித்துப் பேசினர். இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

புலிவலம் :

26—5—57 மாலை இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் புதுவரிகள் கண்டன ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது; பொதுக் கூட்டத்தில் தோழர்கள் இராமாநுசம், இராசவேல், தங்கராசு முதலியோர் புது வரிகளைக் கண்டித்துப் பேசினர்.

காவேரி நகர் :

26—5—57 காலை 9 மணிக்கு இவ்வூர் தி. மு. கழக அலுவலகத்தில் உறுப்பினர் கூட்டம் தோழர் து. பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்றபோது, புது வரிகளை எதிர்த்து இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டிப்பாளையம் :

26—5—57 மாலை 5 மணிக்கு மைலம்பாடி ஊராண்மைக் கழக துணைத் தலைவர் தலைமையில் வரி எதிர்ப்பு கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது செயலாளர், துணைச்செயலாளர் மற்றும் கழக உறுப்பினர்களும் வரிகளைக் கண்டித்துப் பேசினர்.

குடியேற்றம் :

26—5—57ல், புதுவரிகள் கண்டன ஊர்வலம் ஒன்று புறப்பட்டு நகர முக்கிய வீதிகளில் சென்று இவ்வூர் ஆற்றில் முடிவடைந்தது; இரவு 7 மணிக்கு ஆற்றில், தோழர் ஆ. க. வேலன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. ஜி. முனியப்பன், பி. ஜி. இராசன், பாண்டியன் ஆகியோர் புதிய வரிகளைக் கண்டித்து பேசியபின், கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பலிங்காநத்தம் :

26—5—57 மாலை 6 மணிக்கு பலிங்காநத்தம் தி. மு. கழகத் தோழர்களால், வரி விதிப்பு கண்டன ஊர்வலம் தோழர் செல்லப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. 6-30 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. புதிய வரிகளைக் கண்டித்து தோழர்கள் பலர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாமக்கல் :

26—5—57 மாலை 6 மணிக்கு இவ்வூரில் புதிய வரிகள் கண்டன பொதுக் கூட்டம் நடைபெற்றது. வி. காளியப்பன், ஏ. நடேசன், பெருமாள் ஆசியோர் புதிய வரிகளின் கொடுமைகளைப் பற்றி பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குணசீலம் :

26—5—57 மாலை 4 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் புதுவரிகள் கண்டன ஊர்வலம் தோழர் குஞ்சிதபாதம் தலைமையில் குணசீலத்திலிருந்து புறப்பட்டு மஞ்சக்கோரை, கல்லூர் வேப்பந்துரை ஆகிய ஊர்களுக்குச் கண்டன ஊர்வலம் நடத்தி, வரிகளின் கொடுமைகளை பொதுமக்களுக்கு விளக்கமான முறையில் எடுத்துச் சொல்லி மாலை 6-30 மணிக்கு குணசீலத்தில் முடிவுற்றது.

தண்ணீர்பள்ளி :

26—5—57ல், புது வரிகள் கண்டன ஊர்வலம் தண்ணீர்ப்பள்ளி தி. மு. க. தோழர்களாலும், ஆதரவாளர்களாலும் இராசேந்திரம் பெரியபாலத்திலிருந்து தோழர் ம. பரமசிவம் தலைமையில் துவங்கி, பாளி, கருங்களாப்பள்ளி வழியாகச் சென்று புதிய வரி விதிப்புக்கு தங்கள் கண்டனத்தை பொது மக்கள் அறியும் வண்ணம் தெரிவித்து இறுதியில் தண்ணீர்ப்பள்ளி அழகிரி திடலை அடைந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

செய்யூர் :

26—5—57-ல், இவ்வூர் தி.மு. கழகத்தின் சார்பில் புதுவரிகளை கண்டித்த ஊர்வலமும், மாலை 6 மணிக்கு சந்தைத் திடலில் ஓர் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. ஊர்வலத்தில் தோழர்கள் ஜி. பாலகிருட்டிணன், சி. சேகர், சி. எஸ். பாலகிருட்டிணன் புது வரிகளைக் கண்டித்துப் பேசினர்.

முத்துவாஞ்சேரி :

26—5—57 மாலை 4 மணிக்கு தோழர் மு. வி. செகன்னதன் தலைமையில் வரிகளை எதிர்த்து ஒலி முழக்கங்கள் எழுப்பியவண்ணம் ஊர்வலம் ஒன்று நடைப்பெற்றது. பின்னர் தோழர் ந. தங்கையன் தலைமையில் ஓர் கூட்டமும் நடைப்பெற்றது; தோழர்கள் சொ. கோவிந்தராசன், பொ. இராமதாசன், சி. கோவிந்தசாமி ஆகியோர் பேசிய பின், ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அறந்தாங்கி :

26—5—57ல், வரிகளின் கொடுமைகளை விளக்கிக் காட்டும் முறையில் துண்டுப்பிரசும் வெளியிடப்பட்டது. மாலை 5-30 மணிக்கு கழகப் பணிமனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு பல முககிய தெருக்களின் வழியாகக் கண்டன ஒலிகளை எழுப்பியவண்ணம் சென்று பின் கழகப் பணிமனையில் கூடி புதிய வரிவிதிப்பை எதிர்த்துக் கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

சேதுபாவாசத்திரம் :

26—5—57 பிற்பகல் 3 மணிக்குப் சேதுபாவா சத்திரம் தி. மு. கழக சார்பில் புதிய வரிகள் கண்டன ஊர்வலம் தோழர் எம். எஸ். சேக்இஸ்மாயில் தலைமையில், நடைபெற்றது. பின்னர் தோழர் வி. அருணுசலம் தலைமையில் புதிய வரிகள் கண்டனம் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கு. அடைக்கலம், கே. எஸ். எம். கலாநேசன், எஸ். ராமையன் எம். எஸ். சேக்இஸ்மாயில் முதலியோர் பேசினர். கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வடநாட்டு நகரங்களில் கழகப் பிரச்சாரம்

கி. மனோகரன், சண்முகநாதன்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

பம்பாயின் பல பகுதிகளிலும், ஆமதாபாத் நகரிலும் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை விளக்கம் செய்வதற்காக கழக முன்னணி வீரர்களான தோழர்கள் கி. மனோகரன், மற்றும் சண்முகநாதன் ஆகியோர் சுமார் ஒரு வார காலம் அங்கு பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

அந்த நகரங்களில் உள்ள கழகத் தோழர்களிடை நாளுக்கு நாள் ஆர்வம் பெருகி வருவதையும், கழக நிகழ்ச்சிகளும், நடவடிக்கைகளும் விரிவாகி வருவதையும் விளக்கும் விபரங்களை இங்கு தருகிறோம்.

ஆமதாபாத் :

திருமணம்

19—5—57 அன்று காலையில் இரு சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றன. தோழர்கள் கி. மனோகரன், சண்முகநாதன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டியும், வாழ்த்தியும் சீர்திருத்தத் திருமணங்களின் நோக்கத்தை விளக்கியும் பேசினர்.

பொதுக்கூட்டம்

பின் மாலையில், நகரில் கழகச் சார்பில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்து தோழர்கள் மனோகரன், சண்முகநாதன் ஆகியோரது கழகக் கொள்கை, இலட்சிய விளக்கம் கேட்டுப் பயன் பெற்றனர்.

ஊழியர் கூட்டம்

மறுநாள் 20—5—57 அன்று காலை 10-மணி அளவில் ஆமதாபாத் நகர தி. மு. க. ஊழியர் கூட்டம் நடைபெற்றது.

பின் மாலை 5-மணிக்கு மீண்டும் தொடர்ந்து நடைபெற்றது.

தோழர்கள் மனோகரன், சண்முகநாதன் ஆகியோர் கழகத் தோழர்களுடன் வேலை முறைகள் பற்றிக் கலந்தாலோசித்ததுடன், கட்சித் தோழர்களின் கடமை பற்றியும் எடுத்துரைத்தனர்.

★

பம்பாய் நிகழ்ச்சிகள்

மதுங்கா :

21—5—57 அன்று மதுங்கா தி. மு. கழகச் சார்பில் ஓர் மாபெரும் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தோழர்கள் மனோகரனும், சண்முகநாதனும், கழக முழக்கம் செய்தனர். கூட்டத்தில், எண்ணற்ற பார்ப்பன நண்பர்கள் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

கூட்ட முடிவில், ஏராளமான பார்ப்பன இளைஞர்கள், 'கழகத்தில் சேருவோம்; என்று ஆர்வம் காட்டினர்.

தாராவி :

22—5—57 அன்று வேதனையின் இருப்பிடமான தாராவியில் தி. மு. கழகச் சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் 'ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; கூட்டம் பிரும்மாண்டமானதாயிருந்தது; பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருந்தனர்.

தி. மு. கழகக் கொள்கை இலட்சியம் குறித்தும், கழகத்தின் தேர்தல் ஈடுபாடு குறித்தும், சட்ட சபையில் கழகப் பணி குறித்தும் தோழர் கி. மனோகரன் அவர்கள் நீண்ட விளக்கம் தந்தார். தோழர் சண்முகநாதன் அவர்கள் கூட்டத் துவக்கில் பேசினர்.

ஊழியர் கூட்டம்

23—5—57 அன்று போதார் கல்லூரியில் மாலை 6-30 மணி அளவில் நடைபெற்ற கழக ஊழியர் கூட்டத்தில் தோழர்கள் மனோகரனும், சண்முகநாதனும் பேசினர்.

தேநீர் விருந்து

அன்று பிற்பகல் 2-30 மணிக்கு தோழர்கள் மனோகரன், சண்முகநாதன் ஆகியோருக்கு கொலாபா தி. மு. கழகத்தினர் ஒரு தேநீர் விருந்தளித்தனர். கிளைக் கழக நிர்வாகிகள், தோழர்களுடனிருந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

பாண்டுப் :

24—5—57 அன்று மாலை 7-மணி யளவில் பாண்டுப் தி. மு. கழகச் சார்பில் ஓர் மாபெருங் கூட்டம் நடைபெற்றது.

இந்தப் பகுதியில் தமிழர், மலையாளிகளுடன் மாராத்தியரும், குஜராத்தியரும் வாழ்கின்றனர்; எனவே, அவர்களும் கழகம் பற்றி அறிந்து கொள்வதற்காக, தோழர்கள் மனோகரனும், சண்முகநாதனும் ஆங்கிலத்திலேயே சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில் குழுமியிருந்த 3,000 மக்கள், கழகம் பற்றிய தெளிவு பெற்றனர்.

புறப்பாடு

பம்பாய் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்ட தோழர்கள் மனோகரனும், சண்முகநாதனும் 25—5—57 பிற்பகல் 3-30-மணிக்கு தாயகம் புறப்பட்டனர்.

நூற்றுக்கணக்கான கழகத் தோழர்களும், நாகர்கோவிலைச் சேர்ந்த நண்பர்களும் புகைவண்டி நிலையம் வந்து தோழர்களை வழி அனுப்பிவைத்தனர்.

பம்பாய் தி. மு. கழகச் செயலாளர் தியாகராசன், தோழர்கள் பொற்கோ, ஆரிய சங்காரன், வள்ளிநாயகம், இராசன், காந்தி, ஜவகர், தாஸ் இன்னும் எண்ணற்ற நண்பர்களிடமிருந்து பிரியா விடைபெற்று மனோகரனும், சண்முகநாதனும் புறப்பட்டனர்.

இந்தியப் பேரரசின் வரி விதிப்புக்கு தி. மு. க. எதிர்ப்பு

'பணக்காரர்கள்—ஏழைகள் என்ற வேற்றுமையை காங்கிரசார் வளர்க்கின்றனர்'

புது வரி விதிப்பு மூலம் இந்நிலைமை தெளிவாகிறது

சென்னைக் கண்டனக் கூட்டத்தில் முன்னணித் தோழர்கள் முழக்கம்

சென்னை, மே 30—

நேற்று மாலை 6-30 மணிக்கு, சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில், புது வரிகள் கண்டன மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று, திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. கழகக் கிளைகள் துணை அமைப்புகள் சார்பில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழியர் அலமேலு-அப்பாதுரையார் அவர்கள் தலைமை வகித்தார்.

அவர் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :—

"தென்னாட்டைத் தேய வைத்து, வடநாட்டை வளமாக்கக் கூடிய தன்மையிலே புது வரிகளை சுமத்தியிருக்கிறார்கள். இந்த வரிகளைப் போடக்கூடாது; இவை ஏழை-எளிய-பாட்டாளி மக்களை வாட்டக்கூடியதாகும்."

பின்னர், பன்மொழிப் புலவர்-கா. அப்பாதுரையார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்த நாட்டில் குடியாட்சி எப்படி நடைபெறுகிறதென்றால், மக்களுடைய வாக்குகளை ஒரு தடவை பெற்றுவிட்டால், அந்த மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பில்லை என்ற வகையில், நடைபெறுகின்றது. உலகத்தில் எந்தக் குடியரசு அரசாங்கத்திற்கும் தெரிந்திருக்கிறதோ — தெரியவில்லையோ, இந்தக் காங்கிரஸ் ஆட்சி தெரிந்திருக்கிறது.

"மக்களுக்கு அதிகமாக நினைவிராது; தேர்தலில் எதையாவது சொல்லி மக்களுடைய வாக்குகளைப் பெற்றுவிட்டு, எதை வேண்டுமானாலும் செய்யலாம்—அதுவும், சென்ற தொடக்கத்திலிருந்தே செய்யலாம் என்பதைத் தெரிந்தேதான் அவர்கள், இதையெல்லாம் செய்கிறார்கள். அதைத்தான் சென்ற இரண்டு மாதத்தில் வரிகளாகச் செய்திருக்கிறார்கள்.

"தேர்தலுக்கு முன், 'சங்கரலிங்கனர் செத்தால் என்ன? ஒருவர் செத்துவிடுவதால் என்ன நட்டம்?' என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் மக்கள், தேர்தலில் அதையெல்லாம் மறந்துவிட்டார்கள்.

"இப்பொழுது நாம் எப்படிப் போராடினாலும் அவர்கள் இந்த 5 ஆண்டுகளுக்கும் அடக்குமுறையைக் கையாளுவார்களே தவிர, மக்களுக்கு நல்லது எதையும் செய்யமாட்டார்கள்.

"இட்லருடைய அரசாங்கத்துக்கும் இவர்கள் ஆட்சிக்கும் உண்மையில் எந்த வேற்றுமையும் இல்லை என்பதை பொதுமக்கள் உணரவேண்டும். ஒரு ஓட்டுகூட காங்கிரசுக்கு இல்லை என்ற நிலை வரும் வரையில் காங்கிரஸ் இப்படித்தான் இருக்கும்.

"மக்கள் உள்ளம் அகில இந்தியக் கட்சிகளுக்கு ஓட்டுகளைப் போடக்கூடாது என்ற முறையில் மாறவேண்டும்.

"தென்னாட்டின் விடுதலை இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்ற நிலை வளர நீங்கள் பாடுபட வேண்டும். இல்லையென்றால் நம் நாட்டை நாம் பேண முடியாது.

"வரியைப் பொறுத்தவரையில் கட்சி வேற்றுமையோ, சாதி வேற்றுமையோ கிடையாது.

"காங்கிரசார் ஏதாவது வேற்றுமை செய்திருக்கிறார்கள் என்றால், அது பணக்காரர்கள் — ஏழைகள் வேற்றுமை தான். அவைதான் இந்த வரிகளும்! காங்கிரசுக்கு தேர்தலில் யார் யார் பணம் கொடுத்தார்களோ, கார் கொடுத்தார்களோ அவர்களுக்கு மட்டும்தான் வரியில்லை. இந்த நாட்டின் வளத்தை உறிஞ்சும் பரம்பரையாக வந்திருப்பவர்கள் இவ்வரசாங்கத்தார்! இதை மக்கள் உணர்ந்து போராட முன்வர வேண்டும்."

அடுத்துத் தோழர் கண்ணதாசன் அவர்கள் புது வரிகளைக் கண்டித்தும், ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தும், புது வரிகளை ஆதரிப்போரின் 'குணநலகோஷ'ங்களை விரித்துரைத்தும், தி. மு. கழகப் பணிகளை விளக்கியும் உரையாற்றினர். அவரது (சொற்பொழிவு பின்னர் வெளிவரும்.)

அடுத்துத் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள், ஏழை மக்களை இவ்வரிகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளக்கிவிட்டு, இப்பிரச்சினையில் ஏழைகளின் கட்சியான தி. மு. கழகம் போராட மக்கள் பெருவாரியாக துணைநிற்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், புது வரிகளைக் கண்டித்தும், அவ்வரிகளால் தென்னகத்திற்கு நன்மையேதும் இல்லையென்பதையும், ஆட்சியின் ஊழல்களை அம்பலப்படுத்தியும், தென்னாடு 5 ஆண்டுத் திட்டங்களில் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் புள்ளி விவரங்களோடு நீண்டதோர் உரையாற்றினர். (அவரது பேச்சு நாளை வெளிவரும்.)

தலைவரின் முடிவுரைக்குப்பின் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

தீர்மானங்கள்

1. வாழ்க்கைத் தரத்தில் இழிந்த நிலையிலே உள்ள மக்களும், ஏற்கனவே வரிப் பளுவால் தத்தளித்துக் கொண்டிருப்பவர்களுமான ஏழை—தொழிலாளர்—நடுத்தர மக்கள்மீது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பெயரால் புது வரிகளை திணித்துள்ள இந்திய அரசியலாரை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனே வாபஸ் வாங்குமாறு இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.
2. ஐந்தாண்டுத் திட்டங்களால் பலன் பெற்றுள்ள வட இந்திய பகுதிகளில் 'செஸ்' வரி விதிப்பதே முறை என்பதை சுட்டிக் காட்டுவதோடு, மேற்படி திட்டங்களால் எந்தவிதப் பயனும் பெறாத தென்னிந்திய மக்கள் மீது விதித்துள்ள புது வரிகளை தவிர்க்குமாறு இந்திய அரசியலாரை இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.
3. புதுவரிகளை புகுத்தும் நிதி அமைச்சர் அவர்கள், ஜனநாயக முறைப்படி தனது பதவியை இராஜினமா செய்துவிட்டு, புதுவரிகளை அடிப்படையாக வைத்து பொதுக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மத்திய மந்திரிகள்

சம்பளத்தைக் குறைத்துக் கொள்வராம்

புதுடில்லி, மே 28—

மத்திய சர்க்கார் மந்திரிகள் தாங்களாகவே தங்களது சம்பளத் தொகையை ஒரு கணிசமான அளவுக்குக் குறைத்துக் கொள்வது பற்றிய அறிவிப்பு சிக்கிரமே வரும் என்று கூறப்படுகிறது.

இந்த யோசனையை, காங்கிரஸ் தலைவர் தேபர் முடுக்கிவிட்டிருக்கிறாராம்!

குடியரசுத் தலைவர் செய்தது போல மத்திய மந்திரிகளும் தங்களது சம்பளத்தையும் குறைத்துக்கொள்ளவேண்டும் என்று கூறப்படுகிறது.

இப்போது மத்திய மந்திரிகள் ரூ. 3,000 சம்பளம் பெறுகின்றனர்; இனி ரூ. 1,000 மட்டுமே பெறுவர் என்றும்கூறப்படுகிறது.

கங்கை சமவெளியில்

எண்ணெய் கண்டுபிடிப்பு

கனடா உதவியுடன் தொழிற்சாலை

புதுடில்லி, மே 27—

இராஜஸ்தான், கங்கை சமவெளியின் சில பகுதிகளில் எண்ணெய் ஊற்று இருப்பதைக் கண்டறிய கடந்த மார்ச் திங்களில் 'துப்புறவு' மேற்கொள்ளப்பட்டது.

இப்போது 'துப்புறவு' வேலைகள் முடிந்துவிட்டதுடன், அது பற்றிய அறிக்கையையும் கனடாவின் தற்காலிக ஹைகமிஷனர் மத்திய அரசாங்கத்திற்கு தந்துள்ளார் என்று மக்கள் சபையில் மத்திய அமைச்சர் மாளவியா தெரிவித்துள்ளார்.

கொழும்பு உதவித் திட்டத்தின்கீழ் இந்த 'துப்புறவு' வேலை மேற்கொள்ளப்பட்டதாகும்.

இந்தியாவும்—கனடாவும் கூட்டாகச் சேர்ந்து இங்கு எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையை நிறுவக்கூடும்.

உழைக்காமல் கிடைக்கும் செல்வம்

திருமலை, மே 30—

திருப்பதி ஏழுமலையானுக்கு ஏப்ரல் மாதம் ரூ. 2,35,284-2-3 இந்திய நாணயங்களும், ரூ. 1,688—6—0 ஐதராபாத் நாணயங்களும், ரூ. 398-7-0 தோலா எடை தங்கமும், ரூ. 7,059-8-0 தோலா எடை வெள்ளியும், ரூ. 756-8-0 பழைய ஜார்ஜ் - எட்வர்டு - இராணி வெள்ளி ரூபாய்களும், 71 சவரன்களும், ரூ. 210 மதிப்புள்ள கடன் பத்திரங்களும் வருமானமாகக் கிடைத்துள்ளதாம்.

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறியவர்கள்

புள்ளி விவரம் தருகிறார் மத்திய அமைச்சர்

புதுடில்லி, மே 28—

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 1,62,202 இந்துக்கள் இந்தியாவிற்குக் குடியேறியுள்ளனர் என்று புள்ளி விவரங்களுடன் மத்திய வெளிநாட்டு உதவி அமைச்சர் இலக்குமிமேனன் மாநிலங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

ஏற்காடு மறுதேர்தல்

வாக்குப்பதிவுகள் விவரம்

சேலம், மே 29—

சென்னை சட்டசபைக்கு சேலம் மாவட்டம் ஏற்காடு தனித் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளது.

மொத்தம் உள்ள 1,59,323 வாக்காளர்களில் 1,21,140 பேர் வாக்குப் பதிவு செய்யவில்லை. பதிவான 38,183 வாக்குகளில் செல்லுபடியாகாதவை 6 - ஆகும்.

தி. மு. கழக அபேட்சகர் சின்னு கவுண்டர் 17,713 வாக்குகள் பெற்றுள்ளார்.

காங்கிரஸ்அபேட்சகர் குழந்தை கவுண்டர் 20,464 வாக்குகள் பெற்றுள்ளார்.

தமிழகத்தில் தங்கம் கலந்த மண்

ஆண்டிப்பட்டி அருகில் உள்ளதாம்

ஆவன செய்ய அரசாங்கம் முன்வருமா ?

25—5—57ல், ஆண்டிப்பட்டியில் நடைபெற்ற மேற்படி வட்ட காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் பேசிய ஒரு தோழர் மேற்படி வட்டத்தில் தங்கம் கலந்த மண் இருப்பதாக ஒரு தகவல் கொடுத்திருக்கிறார். விவரம் வருமாறு:—

"ஆண்டிப்பட்டிக்குத் தெற்கேயுள்ள வருசநாட்டு மலைப் பகுதியில் தங்கம் கலந்த மண் இருக்கிறது. பல ஆண்டுகட்கு முன்னால் மதுரை மாவட்டத்தில் பணியாற்றிய க்ரூத் என்ற ஆங்கிலேய அதிகாரி இந்த மண்ணை எடுத்து ஆராய்ந்தறிந்து தங்கம் இருப்பதைக் கண்டுபிடித்தார். அப்போது பவுன் விலை ரூ. 13 ஆக இருந்தது; அக்கலவை மண்ணை எடுத்து விஞ்ஞான முறையில் ஒரு பவுன் தங்கம் எடுக்க ரூ. 13 செலவாயிற்றும்; எனவே, இதில் இலாபம் இல்லை எனக் கருதி, மேற்கொண்டு ஆராய்வதை கைவிட்டுவிட்டார் அந்த அதிகாரி என்று தெரிகிறது. தற்போது, தங்கம் விலை பன்மடங்கு அதிகமாக இருக்கிறது; எனவே, அரசியலார் கனிப்பொருள் ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு அப்பகுதியில் தங்கம் எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

"வைகை அணைக்கட்டுப் பகுதியில் சிமெண்டு உற்பத்திக்கான கற்கள் அதிகமாகக் கிடைப்பதால் அதைப் பரிசீலனை செய்து, ஆண்டிப்பட்டி அருகே ஒரு சிமெண்டுத் தொழிற்சாலை நிறுவ வேண்டும்."

இவைகளைத் தீர்மானங்களாகவே நிறைவேற்றியிருப்பதாகவும் தெரியவருகிறது.

திருமணம்

2—6—57 காலை 10 மணிக்கு, திண்டுக்கல் தோழர் தில்லி ராசன்—விழுப்புரம் தோழியர் சானகி வாழ்க்கை ஒப்பந்த விழா, விழுப்புரம்—பாண்டி ரோடு, 73 எண்ணுள்ள மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

புது வரி கண்டனக் கூட்டங்கள்

சென்னை - ஏழுகிணறு :

31—5—57 மாலை 6 மணிக்கு, சென்னை 9-வது வட்ட 'அண்ணா அறிவகம்' சார்பில், ஏழுகிணறு, குட்டி. மேஸ்திரி தெருவில், தோழர் ஏ. எஸ். வேணு தலைமையில் தோழர்கள் காஞ்சி-கல்யாண சுந்தரம், ஏ. வி. பி. ஆசைத் தம்பி எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர்.

நெல்லிக்குப்பம் :

31—5—57 மாலை 6 மணிக்கு புதுவரிகள் கண்டனப் பொதுக் கூட்டம், நெல்லிக்குப்பம் ஐம்புலிங்கம் பூங்காத்திடலில், தோழர் மு. சக்ரபாணி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, புலவர் ஆறுமுகம், சி. பாலவேலாயுதம், பொன். சொக்கலிங்கம் கே. ஆர். சபாபதி ஆகியோர் பேசுவர்.

நெல்லிக்குப்பத்தில்

தி. மா. மு. கழகத் துவக்க விழா

31-5-57 பிற்பகல் 3 மணிக்கு, நெல்லிக்குப்பத்தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடைபெறும்; அதுபோது, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் துவக்கிவைப்பார்; தோழர் பொன்.- சொக்கலிங்கம் கொடியேற்றுவார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

சொற்பயிற்சிக் கூட்டம்

30—5—57 மாலை, இராயபுரம் சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப் பணிமனையில் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில், 'நாட்டுப் பிரிவினை' என்னும் பொருள் பற்றி சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

சேதி தெரியுமா ?

எர்ணாகுளம், மே 27—

வெளிநாடுகளுக்கு 'எரு' ஏற்றுமதி செய்து வந்த இரு கம்பெனிகள் தற்போது 'இறைசசி' ஏற்றுமதியிலும் ஈடுபட்டுள்ளது. ஒரு இராத்தல் இறைச்சியின் விலை 70 புதிய காசுகளாம்! ஒரு கம்பெனி மட்டும் கடந்த ஆறு மாத காலத்தில் 11/4 இலட்சம் இறைச்சியை ஏற்றுமதி செய்துள்ளதாம். என்ன இறைச்சி தெரியுமா—தவளை !

தோட்டங்களைத்

தேசிய மயமாக்கும் பிரச்சினை

புதுடில்லி, மே 28—

"தோட்டங்களைத் தேசியமயமாக்க வேண்டும் என்று கேரள சர்க்காரிடமிருந்து கோரிக்கை எதுவும் மத்திய சர்க்காருக்கு வரவில்லை"

என்று, வர்த்தக - தொழில் இலாகா மந்திரி மொரார்ஜி தேசாய், மாநிலங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

பெண் போலீசார் சுறுசுறுப்பு!

கோலாலம்பூர், மே 28—

மலேயாவில் பெண் போலீஸ் படை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் படையில் இந்திய—மலேய—சீனப் பெண்கள் சேர்ந்துள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 54 பெண் போலீசாருக்கும் பிரிட்டனிலிருந்து வந்துள்ள ஓர் பெண் போலீஸ் அதிகாரி பயிற்சியளித்துள்ளார்.

வேலை நேரத்தில் ஆண் போலீசாரைப் போலவே இந்த பெண் போலீசாரும் சுறுசுறுப்பாகக் காணப்படுகின்றனராம்.

பொறுப்பற்றமுறையில் கார்களை ஓட்டிச் சென்றவர்களை முதல் முதலில் இவர்கள் கைது செய்துள்ளனராம்.

கழகக் கூட்டங்கள்

★

தி. தா. இலுப்பூர் :

சின்னக்கடை வீதி சதுக்கத்தில் 1—6—57 இரவு 7 மணிக்கு

தலைவர் :

எல். எஸ். எல். மணன்

பேசுவோர் :

மி. சு. இளமுருகு
கி. இலக்குமணன்
அப்துல்ரசாக்கு

★

ஆரணி :

(வடாற்காடு மாவட்டம்)
1—6—57 அன்று

தலைவர் :

ப. செல்வரசு

பேசுவோர் :

சத்தியவாணி முத்து எம்.எல்.ஏ.
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
சி. பி. சிற்றரசு
கே. பி. சுந்தரம்
தி. எத்திராசன்

திராவிட முன்னேற்றக் கழகத் தக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.எ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.